## 4.3 2006 – 2007 மாநில நிதிக்குழு மான்யம் – சமன்பாடு மற்றும் ஊக்க நிதியிலிருந்து ரூ.90.00 கோடியை அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கென விடுவித்தல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி2) துறை

அரசாணை (நிலை ) எண். 178 நாள் : 6.12.2006

படிக்க:

1. அரசாணை நிலை எண்.115, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.2) துறை நாள். 11.9.2006
2. கடித எண் 29437/மாஅதி. 2/2006–2, நாள். 19.10.2006
3. அசாகு.எண்.29437/மாஅதி./2006–2, நாள். 20.10.2006

**ஆணை**

பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையின் முதலாவது கூட்டத்தில், மேதகு ஆளுநர் அவர்கள் ஊரகப் பகுதிகளில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் அரசு கூடுதல் கவனம் செலுத்தும் என்றும், கிராமங்களில் உள்ள முக்கியத் தெருக்கள் படிப்படியாக கான்கீரிட் தளங்களாக மாற்றப்படும் என்றும், ஐநூறு அல்லது ஐநூறுக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஊரகப் பகுதிகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும், கிராமங்களில் மக்கள் பொதுவாக கூடும் மையப் பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

2. இவ்வறிப்பினைச் செயல்படுத்துவது தொடர்பான ஊரக வளர்ச்சி இயக்குநரின் செயற்குறிப்பினை ஆய்வு செய்து, மாநில அரசால் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுவரும் சில திட்டங்களுக்கு மாற்றுத் திட்டமாக அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்த அரசு முடிவெடுத்து மேலே படிக்கப்பட்ட ஒன்றில் கண்டுள்ள அரசாணையில் உத்தரவுகள் வெளியிடப்பட்டது, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான காரணங்கள் மற்றும் இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் பற்றிய விவரங்கள் அனைத்தும் மேற்படி அரசாணையில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

3. அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கான 2006 – 2007 – ஆம் ஆண்டு தேவைப்படும் நிதி ரூ.500 கோடியில் திருத்திய வரவு செலவு திட்டத்தில் ரூ.410 கோடி ஒதுக்கப்பட்டு ஒரே தவணையில் விடுவித்தும் பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது, எஞ்சிய ரூ.90 கோடி நிதியை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து பகிர்ந்தளிக்கப்படும் சமன்பாடு மற்றும் ஊக்கத் தொகை நிதியிலிருந்து வழங்க மேற்படி அரசு ஆணை வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4. எனவே, மேலே பத்தி 3–ல் உள்ள ஆணையின்படி, 2006 – 2007 ம் ஆண்டிற்கான மாநில நிதிக்குழு மானியத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய சேமநிதி, சமன்பாடு மற்றும் ஊக்க நிதித் தொகையான ரூ,135.02 கோடியில் ரூ.90.00 கோடியை கிராம ஊராட்சிகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கென விடுவித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட தலைப்பில் பற்று வைப்பதற்கும் இத்தொகையினை பெற்று கிராம ஊராட்சிகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்கென, சென்னை தவிர அனைத்து மாவட்ட ஆட்சி தலைவர்களுக்கும் வழங்கவும் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

“3604–00 . உள்ளாட்சி மன்றங்களுக்கு ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் – 198 – கிராம ஊராட்சிகளுககு உதவி I – திட்டத்தில் சேராதது AA – மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி கிராம ஊராட்சிகளுக்கு மானியங்கள் – ஊரக வளர்ச்சி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ளவை – 09 – உதவி மானியங்கள் – 02 – மூலதனச் செலவுக்கான மானியங்கள் (த.தொ.கு.எண் 3604–00–198– – 0927)”

6. இந்த ஆணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 70965/ஊவ/06, நாள் 30–11–2006–ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**

அரசு செயலாளர்